# பாதையைத் தடுக்கும் அந்நிய வணிகர்களின் பொருட்களை

## மாநகர் மன்றம் பறிமுதல் செய்தது




**நமது நிருபர்**

கோலாலம்பூர், செப்.6-

பண்டார் தாசேக் செலாத்தான், டேசா தாசேக் மற்றும் ஜாலான் தாசேக் செலாத்தான் 20 சுற்றுப் பகுதிப் பாதைகளைத் தடுக்கும் அந்நியர்களின் விற்பனைப் பொருட்களை கோலாலம்பூர் மாநகர் மன்றம் பறிமுதல் செய்தது.

பண்டார் துன் ரசாக் அமலாக்கத் துறையின் கிளை அலுவலகம் இந்த அமலாக்க நடவடிக்கையை மேற்கொண்டது.

இந்த சிறப்பு நடவடிக்கை 7 பறிமுதல் நடவடிக்கைகள் மற்றும் பாதை மாற்றத்தை செல்லுபடியாகும் உரிமம் இல்லாமல் வணிகம் நடத்திய குற்றத்திற்காக 2016 சிறு வணிகர்களுக்கான உரிமச் சட்டம், 3(1) சிறு சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

இதில் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களில் பிளாஸ்டிக் மேசை-நாற்காலிகள், கனோபி, எரிவாயு தோம்பு உட்பட இதர அனைத்துப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட அனைத்தும் மேல் நடவடிக்கை மற்றும் ஆவணப் பதிவுக்காக தாமான் மிஹார்ஜா செராசிலுள்ள மாநகர் மன்றத்தின் பறிமுதல் கிடங்கிற்கு அனுப்பப்பட்டன என்று ஓர் அறிக்கையில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.